பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை- 4

17 08 2024 7 15

<u>தலைப்புச் செய்திகள்</u>

- இறக்குமதியை தவிர்த்து உள்நாட்டு உற்பத்தியை அதிகரிக்க வேண்டுமென்று குடியரசு துணைத்தலைவர் திரு ஜக்தீப் தன்கர் வலியுறுத்தியுள்ளார்.
- நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்படும் வழக்குகளுக்கு விரைந்து தீர்வு காண்பதற்கான நடவடிக்கைகளை அரசு மேற்கொண்டு வருவதாக மத்திய சட்ட அமைச்சர் திரு அர்ஜுன் ராம் மெஹ்வால் தெரிவித்துள்ளார்.
- நாட்டில் குரங்கு அம்மை நோய் பாதிப்பு இல்லை என்று மத்திய சுகாதார அமைச்சர் திரு ஜெ பி நட்டா தெரிவித்துள்ளார்.
- நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் தமிழகம் இரண்டாவது இடத்தில் உள்ளதாக முதலமைச்சர் திரு மு க ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.
- பெருவில் நடைபெறவுள்ள உலக தடகள சாம்பியன் போட்டியில் இந்தியாவின் சார்பில் 42 பேர் பங்கேற்பார்கள் என அறிவிக்கப்பட்டுள்ளது.

---- இனி விரிவான செய்தகிள்

[]<<<>>>[]

உள்நாட்டில் உற்பத்தி செய்ய வாய்ப்புள்ள பொருட்களின் இறக்குமதியை குறைத்து, உள்நாட்டு உற்பத்தியை அதிகரிக்க வேண்டுமென்று குடியரசு துணைத்தலைவர் திரு ஜக்தீப் தன்கர் வலியுறுத்தியுள்ளார்.

ஆந்திர மாநிலம் வேங்கடாச்சலம் பகுதியில் உள்ள சுவர்ணபாரத் அறக்கட்டளையின் ஆண்டுவிழா கொண்டாட்டத்தில் பங்கேற்று அவர் உரையாற்றினார்.

தேவையற்ற பொருட்களின் இறக்குமதி காரணமாக அந்நிய செலாவணி அதிகரிப்பு, உள்ளூர் தொழிலாளர்களின் வேலை இழப்பு ஆகிய பாதிப்புகள் ஏற்படுவதாக அவர் தெரிவித்தார்.

எனவே உள்நாட்டு உற்பத்தியை அதிகரித்து இப்பிரச்சினைக்கு தீர்வு காணுமாறு தொழில் துறையினரை அவர் கேட்டுக் கொண்டார்.

முன்னதாக வேங்கடாச்சலம் பகுதியில் உள்ள தனியார் பள்ளி ஒன்றை இன்று பார்வையிட்ட குடியரசு துணைத்தலைவர், அங்குள்ள திறன் மேம்பாட்டு பயிற்சி மையத்தை ஆய்வு செய்து, அதன் செயல்பாடுகள் குறித்து கேட்டறிந்தார்.

இளையோருக்கு திறன் மேம்பாட்டு பயிற்சி அளிக்கப்பட வேண்டியதன் அவசியத்தை அப்போது திரு ஜக்தீப் தன்கர் வலியுறுத்தினார்.

[]<<<>>>[]

நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்படும் வழக்குகளுக்கு விரைந்து தீர்ப்பு அளிப்பதற்கான நடவடிக்கைகளை அரசு மேற்கொண்டு வருவதாக மத்திய சட்ட அமைச்சர் திரு அர்ஜுன் ராம் மெஹ்வால் தெரிவித்துள்ளார்.

கேரள உயர்நீதிமன்றத்தில் சமரச மையத்தை தொடங்கி வைத்து அவர் பேசினார்.

நிலுவையில் உள்ள வழக்குகள் பெரும் சவாலாக உள்ளது என்ற அவர் கூறினார்.

சமரச மையங்கள், மக்கள் நீதிமன்றங்கள் ஆகியவை வழக்குகளுக்கு விரைந்து தீர்வுகாண உதவுவதாக அவர் குறிப்பிட்டார்.

மத்திய அரசு கொண்டு வந்துள்ள மூன்று குற்றவியல் சட்டங்களில் ஒன்றான பாரதீய நியாய சன்ஹிதா சட்டம் உலகின் குற்றவியல் சட்டங்களில் முன்னோடியாக இருக்கும் என்று அமைச்சர் .தெரிவித்தார்.

சிறந்த நிர்வாகத்திற்கு விரைவான நீதி அமைப்பு முறை அவசியம் என்று அவர் கூறினார்.

விரைவான நீதியைப் பெறுவது மக்களின் அடிப்படை உரிமை என்றும் அவர் தெரிவித்தார்.

உரிய ஆலோசனைகளைப் பெறாமல் பாரதீய நியாய சன்ஹிதா சட்டம் கொண்டு வரப்பட்டதாக கூறப்படும் குற்றச்சாட்டை திரு அர்ஜூன் ராம் மெஹ்வால் நிராகரித்தார்,

[]<<<>>>[]

மருத்துவர்களின் பாதுகாப்பை உறுதி செய்வதற்கான அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படும் என்று மத்திய சுகாதார அமைச்சகம் தெரிவித்துள்ளது.

கொல்கத்தாவில் பெண் பயிற்சி மருத்துவர் படுகொலை செய்யப்பட்டதை அடுத்து இந்திய மருத்துவ சங்க பிரதிநிதிகள் உள்ளிட்ட மருத்துவர்கள் கூட்டமைப்பினர் புதுதில்லியில் இன்று மத்திய சுகாதார அமைச்சக அதிகாரிகளை சந்தித்து பேசினர்.

அப்போது பணியிடங்களில் மருத்துவர்களுக்கு எதிராக நடைபெறும் வன்முறைகள் குறித்து தங்கள் கவலையை தெரிவித்தனர்.

இதையடுத்து மருத்துவர்கள் மற்றும் அது சார்ந்த பணியாளர்களின் பாதுகாப்பை உறுதி செய்வதற்கான அனைத்து முயற்சிகளும் எடுக்கப்படும் என்று சுகாதார அமைச்சக அதிகாரிகள் உறுதியளித்தனர்.

பாதுகாப்பை உறுதி செய்வதற்கான நடவடிக்கைகளை பரிந்துரைக்க குழு ஒன்று அமைக்கப்படும் என்றும் அவர்கள் தெரிவித்தனர்.

இது தொடர்பாக மாநில அரசுகளும் தங்கள் கருத்துக்களை தெரிவிக்கலாம் என்று அவர்கள் அறிவுறுத்தினர்.

சுகாதார பணியாளர் பாதுகாப்பு தொடர்பான சட்டங்களை 26 மாநிலங்கள் ஏற்கனவே நிறைவேற்றியுள்ளதாகவும் அதிகாரிகள் தெரிவித்தனர்.

நாட்டில் டெங்கு மற்றும் மலேரியா பாதிப்புகள் அதிகரித்து வருவதை கருத்தில் கொண்டு பொதுநலன் கருதி போராட்டத்தில் ஈடுபட்டுள்ள மருத்துவர்கள் அதை கைவிட்டு பணிக்கு திரும்ப வேண்டுமென்று சுகாதாரத்துறை அதிகாரிகள் கேட்டுக் கொண்டனர்.

இதனிடையே கொல்கத்தா பெண் பயிற்சி மருத்துவர் கொலை செய்யப்பட்டதை கண்டித்து நாடு முழுவதும் இன்று மருத்துவர்கள் ஒரு நாள் வேலை நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

தமிழகத்தில் சில மருத்துவமனைகளில் மருத்துவர்கள் பொதுமக்கள் நலன் கருதி கருப்பு பேட்ஜ் அணிந்து பணியில் ஈடுபட்டதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

**[]<<<>>>[]**

மத்திய பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு ராஜ்நாத்சிங் தமிழகத்தில் சென்னையில் கடலோர காவல்படையின் கடல்சார் மீட்பு ஒருங்கிணைப்பு மையத்தின் புதிய கட்டிடத்தை நாளை திறந்து வைக்கிறார்.

மீனவர்களுக்கான கடல்சார் மீட்பு நடவடிக்கைகளை ஒருங்கிணைத்தல் மற்றும் செயல் திறனை மேம்படுத்தும் பணிகளை இந்த மையம் மேற்கொள்ளும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

புதுச்சேரி கடலோர காவல்படை விமானதள வளாகத்தையும் திரு ராஜ்நாத்சிங் திறந்து வைக்கிறார்.

புதுச்சேரி மற்றும் தென்தமிழக கடலோரப் பகுதிகளின் பாதுகாப்பை வலுப்படுத்துவதில் இது முக்கிய பங்காற்றும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.,

**[]<<<>>>[]**

பிஜேபி தேசிய நிர்வாகிகள் கூட்டம் புதுதில்லியில் தற்போது நடைபெற்று வருகிறது.

கட்சித் தலைவர் திரு ஜெ பி நட்டா தலைமையில் நடைபெறும் இக்கூட்டத்தில் பிஜேபி உறுப்பினர்கள் சேர்க்கை, கட்சி நிர்வாகிகள் தேர்தல் இந்த கூட்டத்தில் ஆலோசனை மேற்கொள்ளப்படுகிறது,.

ஜம்மு-கஷ்மீர், ஹரியானா, மகாராஷ்டிரா, ஜார்க்கண்ட் மாநிலங்களில் நடைபெறவுள்ள சட்டப்பேரவைத் தேர்தலை எதிர்கொள்வதற்கான முன்னேற்பாடுகள் குறித்தும் இக்கூட்டத்தில் விவாதிக்கப்படுவதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

இக்கூட்டத்தில் கட்சியின் தேசிய நிர்வாகிகள், கட்சியின் மாநில பொறுப்பாளர்கள், மாநில தலைவர்கள், பொதுக்செயலர்கள் உள்ளிட்டோர் பங்கேற்றுள்ளனர்.

**[]<<<>>>[]**

நாட்டில் குரங்கு அம்மை நோயால் இதுவரை எவரும் பாதிக்கப்படவில்லை என்று மத்திய சுகாதார அமைச்சர் திரு ஜெ பி நட்டா தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் இந்நோய் பரவல் தடுப்பு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்து மத்திய சுகாதாரத்துறை அமைச்சர் திரு ஜெ பி நட்டா இன்று ஆய்வு செய்தார்.

எனினும் இந்நோய் குறித்து அரசு உன்னிப்பாக அரசு கண்காணித்து வருவதாக அவர் கூறினார்.

உலக சுகாதார அமைப்பு இந்நோயை சர்வதேச பொது சுகாதார அவசர நிலையாக அறிவித்துள்ளதை அடுத்து, விமான நிலையங்கள், துறைமுகங்கள் மற்றும் தரைவழிப் பகுதிகளில் உள்ள சுகாதார பிரிவுகளில் உரிய முன்னெச்சரிக்கை மேற்கொள்ளுதல், பரிசோதனை ஆய்வகங்களை அமைத்தல், நோய் பாதிப்பு கண்டறியப்பட்டால் நோயாளிகளை தனிமைப்படுத்துதல் உள்ளிட்டவை குறித்து இக்கூட்டத்தில் விவாதிக்கப்பட்டதாக அவர் தெரிவித்தார்.

குரங்கு அம்மை நோய் தொற்று இரண்டு முதல் நான்கு வாரங்கள் நீடிக்கும் என்றும், உரிய சிகிச்சையின் மூலம் குணமடையலாம் என்றும் திரு ஜெ பி நட்டா குறிப்பிட்டார்.

**[]<<<>>>[]**

முக்கிய தொழில்நுட்பங்கள் மற்றும் குறைந்த செலவிலான நிதியை பயன்படுத்துவதில் வளரும் நாடுகள் ஒருங்கிணைந்து செயல்பட வேண்டுமென்று வெளியுறவுத்துறை அமைச்சர் திரு ஜெய்சங்கர் வலியுறுத்தியுள்ளார்.

காணொலி வாயிலாக நடைபெற்ற வளரும் நாடுகள் உச்சி மாநாட்டின் வெளியுறவுத்துறை அமைச்சர்கள் அமர்வில் அவர் உரையாற்றினார்.

வளரும் நாடுகள் எதிர்கொண்டு வரும் இடர்பாடுகளை தவிர்ப்பதற்கு நாடுகளிடையே கருத்து பரிமாற்றங்கள் இருக்க வேண்டுமென்று திரு ஜெய்சங்கர் கேட்டுக் கொண்டார்,

**[]<<<>>>[]**

நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் தமிழகம் இரண்டாவது இடத்தில் உள்ளதாக முதலமைச்சர் திரு மு க ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

காஞ்சிபுரம் மாவட்டம் ஸ்ரீபெரும்புதூர் அருகே வல்லம்-வடகல் கிராமத்தில் சிப்காட் தொழிற்சாலை குடியிருப்பு வளாகத்தை அவர் இன்று திறந்து வைத்து பேசினார்.

தொழில்துறைக்கு சாதகமான அனைத்து அமசங்களையும் உள்ளடக்கிய மாநிலமாக தமிழகம் திகழ்கிறது என்று அவர் கூறினார்.

தெற்காசியாவிலேயே தமிழகத்தை முன்னணி மாநிலமாக உருவாக்குவதற்கான நடவடிக்கைகளில் மாநில அரசு ஈடுபட்டு வருவதாக அவர் தெரிவித்தார்.

தொழில் வளர்ச்சியில் அரசு கூடுதல் கவனம் செலுத்தி வருவதாக அவர் குறிப்பிட்டார்.,

தமிழகத்தில் தொழில் பூங்காக்கள் இல்லாத மாவட்டங்களில் புதிய தொழில் பூங்காக்கள் அமைக்க அரசு நடவடிக்கை எடுத்து வருவதாக அவர் தெரிவித்தார்.

**[]<<<>>>[]**

பணியின்போது நிலவும் எத்தகைய சவால்களையும் எதிர்கொண்டு சிறப்பாக செயல்பட வேண்டுமென்று மத்திய தொழில் பாதுகாப்புப்படை வீரர்களை அப்படையின் சென்னை பிரிவு தலைமை அதிகாரி திரு எஸ் ஆர் சரவணன் வலியுறுத்தியுள்ளார்.

தமிழகத்தில் ராணிப்பேட்டை மாவட்டம் தக்கோலத்தில் மத்திய தொழில் பாதுகாப்பு பயிற்சி பள்ளியில், பயிற்சியை நிறைவு செய்த வீரர்களிடையே அவர் உரையாற்றினார்.

தேசிய தொழில் பாதுகாப்புப்படை வீரர்கள் நாடாளுமன்றம், விமான நிலையங்கள், நீதிமன்றங்கள் போன்ற முக்கிய இடங்களில் பாதுகாப்புப் பணியை மேற்கொண்டு வருவதாக அவர் கூறினார். மகளிர் அதிக எண்ணிக்கையில் இப்பயிற்சி பெற்றிருப்பது மகிழ்ச்சி அளிப்பதாகவும் திரு எஸ் ஆர் சரவணன் தெரிவித்தார். மொத்தம் 523 பெண் காவலர்கள் உட்பட 739 வீரர்கள் பயிற்சி நிறைவு செய்துள்ளனர்.

**[]<<<>>>[]**

லெபனான் நாட்டின் தெற்குப்பகுதியில் இஸ்ரேல் நடத்திய வான்வளி தாக்குதலில் பத்து பேர் யிரிழந்தனர். இடிபாடுகளில் சிக்கியுள்ளவர்களை மீட்கும் பணியில் அரசு மற்றும் தன்னார்வ அமைப்புகள் ஈடுபட்டு வருவதாக லெபனான் ராணுவம் தெரிவித்துள்ளது.,

**[]<<<>>>[]**

உலக தடகள சாம்பியன் போட்டியில் இந்தியாவின் சார்பில் 42 பேர் பங்கேற்பார்கள் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

ஆடவர் பிரிவில் **Himansu, Sachin** ஆகியோரும் மகளிர் பிரிவில் **Aarti**-யும் 10 ஆயிரம் மீட்டர் நடைப் போட்டியில் பங்கேற்கின்றனர்.

இப்போட்டிகள் **Peru-**வின் லிமா-வில் வரும் 27ஆம் தேதி தொடங்கி, 31ஆம் தேதிவரை நடைபெறவுள்ளன.

***End of News***